**தலைப்பு : 312 – மேல் மாகாண சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

## 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

சகவாழ்வு மற்றும் நிரந்தர அபிவிருத்தியினூடாக மேல்மாகாணத்தை முன்னெடுத்தல்

### 1.2 செயற்பணி

நிதி, பௌதீக மற்றும் மனித வளத்தை மிகத் திறமையாக ஈடுபடுத்தி சகல சமூகத்தினருக்கும் நன்மை பயக்கும் சமாதானம் மற்றும் சகவாழ்வு நிறைந்த நிரந்தர அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபையின் அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

மேல் மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா14,904,313,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் ரூபா13,306,497,120 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா1,597,815,880 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 10.7 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 11,699,313,000 | 11,699,313,000 | - | - |
| மூலதனம் | 3,205,000,000 | 1,607,184,120 | 1,597,815,880 | 49.85 |
| மொத்தம் | 14,904,313,000 | 13,306,497,120 | 1,597,815,880 | 10.72 |

மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.